# பத்மனாபபுரம் நகராட்சி

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் அவசரக் கூட்டம் **2021–ம்** வருடம் பிப்ரவரி **2021 மாதம் 17.02.2021–ம்** தேதி காலை **11.30** மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது அக்கூட்ட நடவடிக்கைகள் விபரம் பின்வருமாறு.

அக்கூட்டத்தில் கலந்துக்கொண்டவர்கள் – திரு . . இராஜாராம், BSc.,
ஆணையாளர்(பொ) (ம) தனி அலுவலர்

## பொருட்கள்

1)சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2020-2021-ன் கீழ் கீழ்க்கண்ட பணிகள் தேர்வு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சியர் (ம) பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணை எண்.ஆ3/4068/2019, நாள் 09/02/2021-ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1, | பத்மனாபபுரம் நகராட்சி –தக்கலை மேட்டுக்கடை பகுதியில் அமைந்துள்ள அரசு முஸ்லீம் தொடக்கப் பள்ளியில் இரண்டு வகுப்பறை அடங்கிய கட்டிடம் கட்டுதல்.(கட்டிடத்தின் முன் பகுதியில் திண்ணை வசதி, மேல் மாடிக்கு செல்லும் வகையிலான சாய்வு தளம், ஒவ்வொரு வகுப்பறைகளிலும் நான்கு மின்விசறி மற்றும் நான்கு மின் குழல் விளக்குகள் ) | 12.00 |

மேற்படி பணிக்கு தொழில்நுட்ப அனுமதி பெற வேண்டியுள்ளதால் நகராட்சி நிர்வாக மண்டல செயற் பொறியாளர், திருநெல்வேலி அவர்களிடம் தொழில் நுட்ப அனுமதி பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1174/2020/இ1)

**மன்றத் தீர்மானம் எண்.1767**

அனுமதிக்கப்படுகிறது.

**2)**இந்நகராட்சிக்குட்பட்ட இடங்களில் முடித் திருத்தம் /அழகு நிலையம் /ஸ்பா/மசாஜ் நிலையம் நடத்துவோர் இந்நகராட்சியில் குறிப்பிட்டுள்ள விண்ணப்பத்தை பெற்று பூர்த்தி செய்து ஆணையர் வசம் ஒப்படைக்க தெரிவித்து தினகரன் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு **(09/01/2021)** விளம்பர கட்டணமாக ரூ.**6960/–** வழங்க அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் அவசர அவசியம் கருதி மேற்படி தொகை வழங்கப்பட்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**மன்றத் தீர்மானம் எண்.1768**

அனுமதிக்கப்படுகிறது.